நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை: திரு.S.இளையராஜா, M.L.,
நீதித்துறை நடுவர், செங்கோட்டை
**2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 நாள் சனிக்கிழமை**
**<u>சுருக்கு விசாரணை வழக்கு எண்.353/2024</u>**

CNR.NO: TNTS120016862024

காவல் உதவி ஆய்வாளர்,
சாம்பவர் வடகரை காவல் நிலையம்
MPC No.1/2024
U/s.181, 185 MV Act ...........குற்ற முறையிடுனர்

/எதிராக/

மதுராஜகுமார், (வயது 37)
த/பெ.சுப்பையா,
வாட்டர் டேங்க் தெரு, வேலாயுதபுரம். ..........குற்றம் சாட்டப்பட்டவர்

சாம்பவர் வடகரை காவல் நிலைய MPC No.1/2024, U/s.181, 185 MV Act-ன் கீழ் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்ட மேலே கண்ட சுருக்கு விசாரணை வழக்கை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்து பிறப்பிக்கும்.

**<u>உத்தரவு</u>**

கடந்த 14.01.2024ம் தேதி 21.00 மணிக்கு சாம்பவர் வடகரையிலிருந்து வேலாயுதபுரம் ரோட்டில் வாகனத்தணிக்கை செய்தபோது எதிரி TN 76 L 5470 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை குடிபோதையில், ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டி வந்ததாக எதிரி மீது பிரிவு 181, 185 MV Act -ன் கீழ் சாம்பவர் வடகரை காவல்நிலைய உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1(i). Point for consideration**

இவ்வழக்கானது 281 BNSS (கு.வி.மு.ச. பிரிவு 258ன்) படி முடித்து வைக்க வேண்டிய வழக்கா? என்பது தீர்மானிக்க வேண்டிய பொருண்மை ஆகும். பிரிவு 281 BNSS (கு.வி.மு.ச. பிரிவு 258) ல் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

**(ii) Section 281 of BNSS**

In any summons case instituted otherwise than upon complaint, a Magistrate of the first class or, with the previous sanction of the Chief Judicial Magistrate, any other Judicial Magistrate, may, for reasons to be recorded by him, stop the proceedings at any stage without pronouncing any judgment and where such stoppage of proceedings is made after the evidence of the principal witnesses has been recorded, pronounce a judgment of acquittal, and in any other case, release the accused, and such release shall have the effect of discharge.

மேற்படி சட்டப்பிரிவின் படி காவல் அறிக்கையின் பெயரில் தொடரப்பட்ட அழைப்பாணை வழக்குகளில் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுத்துப்பூர்வமான காரணங்களை பதிவு செய்து, நிலுவையில் உள்ள அழைப்பாணை வழக்குகளை நிறுத்தம் செய்ய உத்தரவிடலாம் என்பது தெளிவாகிறது.

2) **Ingredients:**

மேற்படி சட்டப்பிரிவை பயன்படுத்த வேண்டுமென்றால் கீழ்க்கண்ட உட்கூறுகள் பின்பற்ற வேண்டும் என தெரியவருகிறது.

1. காவல் அறிக்கையின் பெயரில் தொடங்கப்பட்ட வழக்காக இருக்க வேண்டும்.

2. அழைப்பாணை வழக்காக இருக்க வேண்டும்.

3. சிறப்பு காரணங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்ய வேண்டும்.

3) **Cases Instituted upon Police Report:**

மேற்படி உட்கூறுகள் இவ்வழக்கிற்கு பொருந்துகிறதா என்று இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததில் இந்த வழக்கானது சாம்பவர் வடகரை காவல் நிலையத்தினரால் MPC No.1/2024 ஆக பதிவு செய்யப்பட்ட வழக்காகும். அதனால் மேற்படி 1வது உட்கூறு நிறைவு செய்யப்பட்டுவிட்டது.

4) **Summons Case:**

அடுத்ததாக இந்த வழக்கானது 185 MV Act, 181 MV Act–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 185 MV Act–க்கு தண்டனையாக 6 மாதங்கள் வரை அல்லது அபராதமாக ரூ.10,000/–மும், 181 MV Act–க்கு தண்டனையாக 15 நாட்கள் அல்லது அபராதமாக ரூ.10,000/–மும் விதிக்கக்கூடிய குற்றம் ஆகும். அதனால் மேற்படி 2 வது உட்கூறு நிறைவேற்றப்பட்டுள்ளது.

5) **Special Reason:**

இந்த வழக்கானது 14.01.2024 ஆம் தேதி அன்று MPC No.1/2024 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு, 07.05.2024 தேதியன்று வழக்கானது STC No353/2024 என கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு இந்த வழக்கானது இன்று வரை எதிரிக்கு அரசு தரப்பில் அழைப்பாணை சார்பு செய்யாமல், எந்த முன்னேற்றமும் இல்லாமல் 2024 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது.

6) **Order:**

மேலும் இவ்வழக்கானது எதிரிக்கு அழைப்பாணை சார்பு செய்யாமல் 2024 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருப்பதால், சாம்பவர் வடகரை காவல் நிலையத்தினரால் தொடரப்பட்ட வழக்கான STC No.353/2024 அழைப்பாணை வழக்கின் விசாரணையை குவிமுச பிரிவு 258 (281 BNSS) படி நிறுத்திவைக்க உத்தரவிட்டும் அதன் விளைவாக எதிரியை விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

**7) Order as to case property:**

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.08.01 17:26:38 +0530

நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.